துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள்!

# திருச்சி தெற்கு மாவட்டம் சார்பில் 234 தூய்மைப் பணியாளர்களுக்கு நல உதவிகள்!

## அமைச்சர்கள் கே.என்.நேரு – அன்பில் மகேஸ் பொய்யாமொழி வழங்கினர்!

திருச்சி, நவ. 30–

DCM 48 எனும் தலைப்பில் திருச்சி தெற்கு மாவட்ட கழகத்தின் சார்பாக கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48 வது பிறந்த நாளை முன்னிட்டு தெற்கு மாவட்டக் கழகத்தின் சார்பாக 48 நிகழ்வுகள் நடைபெற இருக்கிறது அதன் முதல் நிகழ்வாக திருச்சி மாநகராட்சி தூய்மைப் பணியாளர்கள் 234 பேருக்கு சீருடை மற்றும் உணவு வழங்கும் விழா திருச்சி சத்திரம் பேருந்து நிலையம் அருகில் அமைந்துள்ள ரவி மினி ஹாலில் நடைபெற்றது .






இந்த நிகழ்வில் மாநகராட்சித் துணை மேயர் G.திவ்யா, மண்டல குழு தலைவர் P.ஜெயநிர்மலா தலைமை வைத்தனர்.

மாநகராட்சி மண்டல குழு தலைவர் – மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன் முன்னிலை வகித்தார்.

நடைபெற்ற கூட்டத்தில் தூய்மை பணியாளர்களுக்கு கழக முதன்மை செயலாளர், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே. என்.நேரு,

தமிழ்நாடு பள்ளி கல்வித்துறை அமைச்சர், மாவட்ட கழக செயலாளர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் உரை நிகழ்த்தி நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

**அமைச்சர் நேருவின் உரை!**

தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு வழங்கும் திட்டம் பள்ளிப்படிப்பு படிக்கின்ற மாணவ மாணவியருக்கு உணவு வழங்குகின்றார் மேற்படிப்பு படிக்கின்ற மாணவ மாணவி யருக்கு ஆயிரம் ரூபாய் ஊக்கத்தொகை சென்னையில் ஆரம்பித்த தூய்மை பணியாளர்களுக்கு உணவு வழங்குகின்ற திட்டத்தினை அனைத்து பகுதிகளுக்கும் விரிவுபடுத்த இருக்கின்றார் . ஓராண்டுக்கு ரூபாய் 210 கோடி, மூன்று ஆண்டுகளுக்கு 630 கோடி அளவில் அனைத்து பகுதிகளுக்கும் நம் தளபதி இத்திட்டத்தை விரிவு படுத்த நிதி வழங்கி இருக்கின்றார்

தூய்மை பணியாளர்களில் ஆயிரம் பேருக்கு வீடு வழங்க திட்டம் தலா ஒரு நபருக்கு 6 லட்சம் மதிப்பில் 60 கோடியில் வீடு வழங்கும் திட்டத்தினை இப்பொழுது நடைமுறைப்படுத்த இருக்கின்றார்

டிசம்பர் 6 அனைத்து மாவட்டங்களிலும் தூய்மை பணியாளர்களுக்கு உணவும் வழங்கும் திட்டத்தை விரிவுபடுத்த இருக்கின்றோம் என இவ்வாறு உரையாற்றினார் .

**அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி உரை!**

ஒரு இயக்கத்தின் தலைவர் அந்த இயக்கத்திற்கு தலைவராக பொறுப்பேற்றது முதல் அந்த இயக்கத்துக்கு தொடர் வெற்றியை மட்டும் பரிசாக வழங்குகின்ற நம்முடைய தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் உடைய வலதுகரமாக அவருடைய கரத்தினை வலுப்படுத்தக் கூடியவராக இருக்கக்கூடிய நமது துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவருடைய பிறந்த நாளை தெற்கு மாவட்ட திமுகவின் சார்பாக 48 நிகழ்வாக நடத்தி முடிப்பதற்கு ஆசைப்பட்டு முதல் நிகழ்ச்சியாக தூய்மை பணியாளர்களுக்கு உடை மற்றும் உணவு வழங்கும் இந்நிகழ்வை தொடங்கி நடத்திக் கொண்டிருக்கின்றோம் .

ஆட்சியாக இருந்தாலும் கட்சியாக இருந்தாலும் முன்கள செயல் வீரராக நிர்வாகியாக இருப்பவர் தான் நம்முடைய துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதியில் எந்த ஒரு நிகழ்ச்சியாக இருந்தாலும் முதலில் தூய்மை பணியாளர்களை அழைத்து பேசுவார் இயற்கை பேரிடர் கொரோனாக்காலம் ஆகிய நேரங்களில் அவர்கள் தான் முன்கள பணியாளர்களாக நின்று பணியாற்றுகின்றனர் .

எனவே அவரது மனதிற்கு பிடித்த தூய்மை பணியாளர்களுக்கு இந்நிகழ்வினை நடத்துவதில் தெற்கு மாவட்டம் பெருமை கொள்கிறது .

இந்நிகழ்வில் தலைமை செயற்குழு உறுப்பினர்கள், வண்ணை அரங்கநாதன், மாவட்டக் கழக நிர்வாகிகள் N.செந்தில், அ.த.த. செங்குட்டுவன், லீலா வேலு, பகுதி கழகச் செயலாளர்கள் மருந்துகடை மோகன், டி.பி. எஸ்.எஸ்.ராஜ் முகமது, ஏ.எம்.ஜி. விஜய்குமார், ஆர்.ஜி.பாபு, மாமன்ற உறுப்பினர் கே.பன்னீர் செல்வம் மற்றும் தூய்மை பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள்!

# கரூர் மாவட்டத்தில் மாபெரும் சதுரங்கப் போட்டி!

## மாவட்டச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. அறிக்கை!

கரூர், நவ.30–

இளைஞர் எழுச்சி நாளை முன்னிட்டு கரூரில் சதுரங்க போட்டியை கரூர் மாவட்ட கழக செயலாளர் வி செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்.



கரூர் மாவட்ட கழக செயலாளர் வி. செந்தில் பாலாஜி, எம்.எல்.ஏ. அறிக்கையில்,

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்லாசிகளுடன், தமிழ்நாட்டிலிருந்து உலகத்தரத்திலான விளையாட்டு வீரர்களை உருவாக்கிடும் முனைப்பில் அயராது உழைத்திடும், தமிழ்நாடு துணை முதலமைச்சர், நமது இளம்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 49வது பிறந்தநாளை கொண்டாடும் வகையில், ரூ. 49 லட்சம் மதிப்பில் மொத்த பரிசுத் தொகையுடன், வருகின்ற நவம்பர் 15 முதல் டிசம்பர் 28 வரை, கரூர் மாவட்டத்தில், கபடி, சிலம்பம், சதுரங்கம், கைப்பந்து, இறகுப் பந்து, கால்பந்து, சைக்கிள் ரேஸ், ஸ்கேட்டிங், மராத்தான் மற்றும் கிரிக்கெட் என தொடர் விளையாட்டு போட்டி திருவிழா நடைபெற்று வருகிறது.

சிலம்பம் ஆண் பெண்களுக்கான போட்டிகள், கபடி போட்டிகள் சிறப்பாக நடைபெற்று பரிசுகள் வழங்கப்பட்டன.

தொடர்ந்து நடைபெறும் போட்டிகளை பற்றிய விபரங்கள்:

போட்டி : சதுரங்கம் ( ஆண்கள் & பெண்கள் )
நாள் : 29.11.2025 சனிக் கிழமை
நேரம் : காலை மணி 8.30
இடம் : பிரேம் மஹால், கரூர்.
பரிசுத்தொகை : ரூ. 6,00,000

போட்டி : ஸ்கேட்டிங் ( ஆண்கள் & பெண்கள் மாநில அளவில் )
நாள் : 29.11.2025 சனி மற்றும் 30.11.2025 ஞாயிறு
நேரம் : காலை மணி 6.00
இடம் : PS SPORTS ARENA, வெண்ணைமலை.
பரிசுத்தொகை : ரூ. 6,00,000

போட்டி : சைக்கிள் பந்தயம் ( ஆண்கள் )
நாள் : 29.11.2025 சனி மற்றும் 30.11.2025 ஞாயிறு
நேரம் : காலை மணி 8.30
இடம் : திருவள்ளுவர் மைதானம், கரூர்.
பரிசுத்தொகை : ரூ. 85,000

போட்டி : கபடி ( பெண்கள் )
நாள் : 07.12.2025 ஞாயிறு
நேரம் : காலை மணி 8.30
இடம் : திருவள்ளுவர் மைதானம், கரூர்.
பரிசுத்தொகை : ரூ. 2,15,000

போட்டி : மராத்தான் ( ஆண்கள் & பெண்கள் )
நாள் : 07.12.2025 ஞாயிறு
நேரம் : காலை மணி 6.00
இடம் : திருவள்ளுவர் மைதானம், கரூர்.
பரிசுத்தொகை : ரூ. 2,68,000

போட்டி : கிரிக்கெட் (ஆண்கள்)
நாள் : 13.12.2025 சனி முதல் 21.12.2025 ஞாயிறு வரை
நேரம் : காலை மணி 8.30
இடம் : திருவள்ளுவர் மைதானம், கரூர்.
பரிசுத்தொகை : ரூ. 2,05,000

போட்டி : இறகுப்பந்து (பெண்கள்)
நாள் : 13.12.2025 சனி
நேரம் : காலை மணி 8.30
இடம் : ஆபிஸர்ஸ் க்ளப், கரூர்.
பரிசுத்தொகை : ரூ. 4,80,000

போட்டி : இறகுப்பந்து (ஆண்கள்)
நாள் : 14.12.2025 ஞாயிறு
நேரம் : காலை மணி 8.30
இடம் : ஆபிஸர்ஸ் க்ளப், கரூர்.
பரிசுத்தொகை : ரூ. 4,80,000

போட்டி : TURF கிரிக்கெட் (ஆண்கள்)
நாள் : 14.12.2025 ஞாயிறு
நேரம் : காலை மணி 8.30
இடம் : விரூ டர்ப், காந்திகிராமம், கரூர்.
பரிசுத்தொகை : ரூ. 70,000

போட்டி : கால்பந்து ( ஆண்கள் )
நாள் : 14.12.2025 ஞாயிறு
நேரம் : காலை மணி 8.30
இடம் : FOURTY ELEVEN TURF, பெரியார் வளைவு, கரூர்.
பரிசுத்தொகை : ரூ. 70,000

போட்டி : வாலிபால் ( ஆண்கள் )
நாள் : 28.12.2025 ஞாயிறு
நேரம் : காலை மணி 8.30
இடம் : திருவள்ளுவர் மைதானம், கரூர்..
பரிசுத்தொகை : ரூ. 1,72,000

கரூர் மாவட்ட சொந்தங்கள் அனைவரையும் கலந்துக்கொள்ளவும், கண்டுக்களிக்கவும் அன்புடன் அழைப்பதாக வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இதன்படி கரூர் பிரேம் மகாலில் சதுரங்க போட்டிகளை வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார். 11 வயதிற்குட்பட்டவர்கள், 13 வயதிற்குட்பட்டவர்கள், 15 வயதிற்குட்பட்டவர்கள், பொதுப்பிரிவினர் போட்டிகள் நடைபெற்றன. வீரர்கள் வீராங்கனைகள் நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டு விளையாடினர்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## தி.மு.க. மகளிர் தொண்டர் அணி

### மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

### தி.மு.க. மகளிர் தொண்டர் அணிச் செயலாளர் நாமக்கல் ப.இராணி அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டப் பொறுப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. மகளிர் தொண்டர் அணியின் தஞ்சை வடக்கு மாவட்டம் - கும்பகோணம் மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### தஞ்சை வடக்கு மாவட்டம்

**கும்பகோணம் மாநகரம்**

தலைவர் – எஸ். ராஜேஸ்வரி, 32ஏ, சுவாமிமலை மெயின் ரோடு, யானையடி, மேலக்காவேரி, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்.

துணைத் தலைவர் – எஸ். ரஞ்சிதா, 12பி/2, மாரியம்மன் கோவில் தெரு, மாதுளம்பேட்டை, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்.

அமைப்பாளர் – கா. பானுமதி, பெருமாண்டி நடுத் தெரு, மேலக்காவேரி, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் – 1) கே. சினேகா 31/5, தெற்கு வள்ளுவர் தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். 2) த. ஞானமணி 9/6, எம்.ஜி.ஆர். நகர், வெங்கட்ராமன் நகர், ரயில்வே புது ரோடு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். 3) ச. அருணாதேவி 2/9, மூர்த்தி தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். 4) ஜி. சத்யா 185/36, காந்தியடிகள் சாலை, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். 5) வி. ஜெயந்தி 21ஏ, சாரங்கபாணி தெற்கு தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். 6) கு. பூசம்மாள் 64ஏ, பைராகித் தோப்பு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். 7) எம். சிந்து 19, ஆணைக்காரன்பாளையம், புதுத் தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 27-11-2025.

**நாமக்கல் ப.இராணி,**
செயலாளர்
தி.மு.க. மகளிர் தொண்டர் அணி

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள்

# நவ.27ல் பிறந்த 27 குழந்தைகளுக்கு தங்கமோதிரம்!

## மு.அப்துல்வஹாப் எம். எல்.ஏ. வழங்கினார்!

*நெல்லை, நவ. 30 -*

*கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் முன்னிட்டு திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பிறந்த 27 குழந்தைகளுக்கு தங்க மோதிரம், அணிவிக்கும் நிகழ்வு மகப்பேறு பிரிவு வளாகத்தில் நெல்லை கிழக்கு மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் இ.நடராஜன் ஏற்பாட்டில் (28ம் தேதி) நடைபெற்றது.*

*இந்நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல்வஹாப் எம். எல்.ஏ. பங்கேற்று குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணிவித்து வாழ்த்தினார். நிகழ்வில் துணை மேயர் ராஜூ, நெல்லை கிழக்கு மாநகர பொறுப்பாளர் தினேஷ், மருத்துவக் கல்லூரி மருத்துவமனை டீன் மருத்துவர். ரேவதி பாலன், பாளை தெற்கு பகுதி பொறுப்பாளர் அன்டன் செல்லத்துரை, மேலப்பாளையம் மேற்கு பகுதி பொறுப்பாளர் துபாய் சாகுல், நெல்லை மண்டல தலைவர் மகேஸ்வரி, மேலப்பாளையம் மண்டல தலைவர் கதிஜா இக்லாம் பாசிலா, மருத்துவரணி மாவட்ட அமைப்பாளர், நரம்பியல் நிபுணர், மருத்துவர் ரவி, வட்டசெயலாளர் பாளை சதீஷ் குமார், மாமன்ற உறுப்பினர்கள் கந்தன் சகாய ஜூலியட் மேரி, ராஜேஸ்வரி, மானூர் ஒன்றிய கவுன்சிலர் சுரேஷ், பிரதிநிதி துரையரசன், தச்சநல்லூர் பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் மகேஷ் ஆதித்தன், மானூர் மேற்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் கானார்பட்டி சாமுவேல், மானூர் கிழக்கு ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் மைக்கேல், பாளை தெற்கு பகுதி விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் முருகன், மகளிர் அணி தேவிகா, பூமணி, வாசுகி செல்லத்துரை உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.*



தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தருமபுரி அரசு மருத்துவமனை அருகில் தர்மபுரி மேற்கு நகர பொறுப்பாளர் எம்.பி.கௌதம் ஏற்பாட்டில் தருமபுரி கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆ.மணி எம்.பி பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கினார். நிகழ்ச்சியில் கிழக்கு நகர செயலாளர் நாட்டான் மாது,தருமபுரி நகர மன்ற தலைவர் லட்சுமி மாது,மற்றும் ரேணுகாதேவி,முல்லைவேந்தன்,சுருளிராஜன், ரஹிம்,டி.ஏ.ரவி, உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



சேலம் மாநகர தி.மு.க இளைஞரணி சார்பில் துணை முதல்வர். உதயநிதி ஸ்டாலின் பிறந்த தினத்தையொட்டி மாநகர அமைப்பாளர் கேபிள் சரவணன் தலைமையில் கழகத்தினர் பஸ் பயணிகள் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினார்கள். உடன் மாநகர துணை அமைப்பாளர் வெங்கடேஷ், பகுதி அமைப்பாளர் தரண் சுந்தர், துமைப்பாளர்கள் கிஷோர், வேதமூர்த்தி கிரிதரன், கோரிமேடு வினேத், முன்னா கிஷோர்குமார், இளங்கோ, சம்பத்குமார் மற்றும் கோட்டத்தின் அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

## தி.மு.க. மகளிர் அணி

### மாவட்ட, மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

### தி.மு.க. மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன் அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர்/பொறுப்பாளர் ஒப்புதலோடு மகளிர் அணியின் ஈரோடு வடக்கு மாவட்டம் மற்றும் கும்பகோணம் மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### ஈரோடு வடக்கு மாவட்டம்

தலைவர் - கே.ஜி.சரஸ்வதி, 10, பழனியப்பா வீதி, புதுவள்ளியம்பாளையம், கோபி.

துணைத் தலைவர் – சி.கிருஷ்ணவேணி, 4/117, மெயின் ரோடு, அளுக்குளி, கோபி.

அமைப்பாளர் – எம்.பாண்டியம்மாள், 19, இந்திரா வீதி குறுக்கு–1, தவுட்டுபாளையம், அந்தியூர்.

துணை அமைப்பாளர்கள் – 1) கே.ரேணுகாதேவி, 135/1, கஸ்பா வீதி, பொலவக்காளிபாளையம், கோபி. 2) எஸ். மகேஸ்வரி, 21/1, திருவள்ளுவர் வீதி, அரியப்பம்பாளையம், சத்தி. 3) பி.பாக்கியலக்ஷ்மி, 217, கவின் கார்டன், சின்னமொடச்சூர், கோபி. 4) எம்.ஜெயலட்சுமி, சுமைதாங்கி அருகில், தாழைக்கோம்புபுதூர், கூகலூர், கோபி. 5) எம். பர்வீன்பேகம், 23ஏ, சிலேட்டர் ஹவுஸ் வீதி, கோபி. வலைத்தள பொறுப்பாளர் ஏ.ஹாத்துண்ஜன்னா, 132/3, மேற்கு வீதி, நேருநகர், அரியப்பம்பாளையம், சத்தி.

### தஞ்சை வடக்கு மாவட்டம்

**கும்பகோணம் மாநகரம்**

தலைவர் – ஜி. தீபா, 72/43, சிங்காரம் தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்.

துணைத் தலைவர் - பா. விஜயா, 77/36, சாரங்கபாணி தெற்கு வீதி, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்.

அமைப்பாளர் - ச. தமிழ்செல்வி மோகன், 25/34, பாணாதுறை மேல வீதி, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) த. பானுமதி 18/127, கும்பேஸ்வரர் வடக்கு வீதி, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். 2) பி. பிளாரன்ஸ்மேரி 7சி, பாணாதுறை மெயின் ரோடு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். 3) அ. ஜெயலட்சுமி பாணாதுறை 14வது தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். 4) பா. மங்கையர்கரசி 74, சாரங்கபாணி தெற்கு வீதி, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். 5) வே. மகாலட்சுமி 86, காசிராமன் தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். 6) அ. வர்ஷா 2ஏ, கோதண்டபாணி தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். 7) ப. பானுமதி 30, சித்தா தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 26-11-2025.

**ஜெ. ஹெலன்டேவிட்சன்,**
செயலாளர்
தி.மு.க. மகளிர் அணி


## நாகை மாவட்ட கழக இளைஞரணி

# துணை அமைப்பாளர் கே.பன்னீர்செல்வம் மறைவு!

## இளைஞர் அணிச் செயலாளர் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, நவ. 30-

நாகை மாவட்டம், கீழையூர் ஒன்றியம், ஆலமழை நடுத்தெருவைச் சேர்ந்தவரும் நாகை மாவட்ட கழக இளைஞர் அணித் துணை அமைப்பாளருமான கே.பன்னீர்செல்வம் அவர்கள் மறைவுக்கு கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:



நாகை மாவட்டம் கீழையூர் ஒன்றியம் ஆலமழை நடுத்தெருவைச் சேர்ந்தவரும் நாகை மாவட்ட கழக இளைஞர் அணித் துணை அமைப்பாளருமான சகோதரர் கே.பன்னீர்செல்வம் அவர்கள் எதிர்பாராத விதமாக மறைவெய்தியது மிகுந்த அதிர்ச்சியும் வேதனையையும் தருகிறது.

இளம் வயது முதலே கழகத்தின் மீது மாறா பற்றுக் கொண்டு தீவிரமாக இயக்கப் பணியாற்றி வந்தவர் அன்புச் சகோதரர் கே.பன்னீர்செல்வம். தாய், தந்தையர் கழகத்தின் அடிப்படை உறுப்பினர்களாக இருந்து செயல்பட்டு வந்த குடும்பப் பின்னணியில் வளர்ந்த இவர், அதே உணர்வுடன் இயக்க பணியாற்றி வந்தார்.

அவரது உழைப்புக்கு அங்கீகாரமாக ஒருங்கிணைந்த கீழையூர் ஒன்றிய அமைப்பாளர், கீழையூர் கிழக்கு ஒன்றிய அமைப்பாளர், நாகப்பட்டினம் மாவட்ட துணை அமைப்பாளர் எனப் படிப்படியாக பொறுப்பு உயர்வுகளை வழங்கியது நம் இளைஞர் அணி. இளம் வயதில் அவரது திடீர் மறைவு கழகத்திற்கும் இளைஞர் அணிக்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

அவரின் இணையர் சகோதரி பி.சரண்யா அவர்களும் கழகத்தில் தீவிரமாக இயங்கி வருபவர். ஒன்றிய குழு முன்னாள் உறுப்பினராகவும், தற்போது மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளராகவும் செயல்பட்டு வரும் அவருக்கு, இது எடு செய்ய முடியாத இழப்பு.

சகோதரர் கே.பன்னீர்செல்வம் அவர்களின் மறைவுக்கு கழக இளைஞர் அணி சார்பில் ஆழ்ந்த இரங்கலையும், அவரை இழந்து வாடும் இணையர் திருமதி பி. சரண்யா, மகன்கள் கே.பி.அகிலன், கே.பி. அமுதன், மகள் கே.பி.ஆத்விகா, அவரது குடும்பத்தினர் மற்றும் நாகை மாவட்ட கழக உடன்பிறப்புகளுக்கு ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பாக புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள பேரறிஞர் அண்ணாவின் திருஉருவச் சிலைக்கு மாவட்டச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான தே. மதியழகன் மாலை அணிவித்து, கேக் வெட்டி பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கினார். இதனைத் தொடர்ந்து கிருஷ்ணகிரி புனித அன்னாள் மேல்நிலைப் பள்ளியில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் பள்ளி மாணவ, மாணவிகள் ஆயிரம் பேருக்கு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பாக இலவச கண் கண்ணாடிகளை வழங்கி, கேக் வெட்டி, இனிப்புகளை வழங்கினார் இந்நிகழ்ச்சியில் மாவட்ட அவை தலைவர் நாகராஜ், மாவட்ட துணை செயலாளர்கள் கோவிந்தசாமி, சாவித்திரி, பொதுக்குழு உறுப்பினர்கள் நாகராசன், சித்ரா சந்திரசேகர் நகர பொறுப்பாளர்கள் அஸ்லாம் வேல்மணி உள்ளிட்ட ஏராளமானோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்